18.03.2025
அசல் வழக்கு எண்: 245/2014

பி.வா.சா.1 சாட்சி சசிக்குமார் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1936 மற்றும் 1940 வருடத்திய செட்டில்மெண்டு ஆவணங்களில் கண்ட சொத்துக்களுக்கு UDR காலத்திற்கு முன்பு சித்தி விநாயகர் டிரஸ்டி பசுபதியம்மாள், சீனிவாசகம், ராமநாதன் மற்றும் லெட்சுமியம்மாள் ஆகியோர்கள் பெயரில் கூட்டு பட்டா இருந்தது என்றால் ஞாபகம் இல்லை. UDR காலத்தில் மேற்படி சொத்துக்கள் சித்தி விநாயகர் கோவில் பெயரில் பட்டா எண்.720 ல் கட்டுப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் மேற்படி சொத்துக்கள் ராமநாதன், ராம்குமார், நடராஜன் மற்றும் சசிக்குமார் ஆகியோர்கள் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். எந்த ஆவணத்தின் அடிப்படையில் எனது பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை. நாங்கள் பராமரித்து வருவதால் எங்கள் பெயரில் கூட்டுப்பட்டா வழங்கினார்கள்.

மேற்படி கூட்டுப்பட்டாவை பெறுவதற்கு யாரிடம், என்னென்ன ஆவணங்கள் இணைத்து மனு கொடுத்தேன் என்றால் எனது தகப்பனார் ராமநாதரெட்டியார் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தார். UDRஆவணங்களை இணைத்து கொடுத்தார்கள். மேற்படி மனு சம்பந்தமாக விசாரணை நடத்தினார்கள் என்றால் விசாரணை நடத்தினார்கள். விசாரணை அதிகாரி பிறப்பித்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. எனது தகப்பனார் வருவாய் கோட்டாட்சியரிடம்

மனு கொடுக்கவில்லை என்றாலும் அதனுடன் ஆவணங்கள் கொடுக்கவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் விசாரணையும் நடத்தவில்லை என்றாலும் சரியல்ல. எனது தகப்பானர் மனு கொடுத்திருந்தால் அந்த மனுவை கோப்பிற்கு எடுத்து விசாரணை செய்வதற்கு அழைப்பாணை அனுப்பியிருப்பார் என்றாலும், அந்த அழைப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் ஞாபகம் இல்லை. எங்களது பெயரில் கூட்டுப்பட்டா ஏற்படுத்துவதற்கு மனு தாக்கல் செய்து, அதில் மண்டல துணை வட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றாலும் ஆனால் மேற்படி மண்டல துணை வட்டாட்சியர் சுப்பாரெட்டியாரின் பெண் வாரிசுகள் அழைப்பாணை அனுப்பி விசாரணை செய்யாமல் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ3 ஆவணத்தில் கள்ளிக்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறு. தவறான பத்திரத்தின் அடிப்படையில் பட்டா மாற்றப்பட்டுள்ளதால் எனது பெயரில் ஏற்பட்டுள்ள கூட்டுப்பட்டா செல்லாது என்றால் தவறு. எனது பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டது இயற்கை நியதிக்கு முரணானது என்றால் தவறு.

சித்தி விநாயகர் கோவிலில் வாதிகளுக்கு உள்ள உரிமைக்கு பாதிப்பு ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில்தான் பி.வா.சா.ஆ1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ1 ஆவணத்தில் கண்ட விபரங்கள் அனைத்தும் 1936 மற்றும் 1940 வருடங்களில் ஏற்படுத்தப்பட்ட தான செட்டில்மெண்டு ஆவணங்களை ஏற்படுத்திய சுப்பாரெட்டியாரின் எண்ணங்களுக்கு முரணாக உள்ளது என்றால் தவறு. அதனால் பி.வா.சா.ஆ1

ஆவணம் எந்த வகையிலும் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் தவறு. பி.வா.சா.ஆ. 1 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல.

மேற்படி தான செட்டில்மெண்டு ஆவணங்களில் கண்ட சொத்துக்களை பொறுத்து 16.10.1984ம் தேதி எனது தகப்பனார் ராமநாதன், லெட்சுமியம்மாள், சீனி, பசுபதியம்மாள் ஆகியோர்கள் பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி பாகபிரிவினை ஆவணத்தில் எ செடியுள் சொத்து பசுபதியம்மாளுக்கும், பி செடியுள் சொத்து சீனி மற்றும் ராமநாதன் ஆகியோர்களுக்கும், சி செடியுள் சொத்து லெட்சுமியம்மாளுக்கும் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால் ஞாபகம் இல்லை. அவரவர் பாகத்தை அனுபவம் செய்து வந்த நிலையில் எ செடியுள் மற்றும் சி செடியுள் சொத்துக்களை அவர்கள் அனுபவிக்ககூடாது என்பதற்காக பி.வா.சா.ஆ. 1 ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ6 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ7 ஆவணத்தில் கண்ட கடிதத்தில் உள்ள விபரம் 1வது மற்றும் 4 ம் வாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. சித்தி விநாயகர் கோவில் என்பது சுப்பாரெட்டியாருக்கும், அவரது பெண் வாரிசு மூவருக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் மட்டுமே பாத்தியப்பட்ட தனிப்பட்ட கோவில் என்றால் சரியல்ல. மேற்படி கோவிலை பொறுத்து வாதிகளும் டிரஸ்டி என்றாலும் நான் மட்டுமே வாரிசு போல பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தை உருவாக்கி இருப்பது தவறு என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 4, 5 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு பிராதின் படி தீர்ப்பாகவேண்டியது என்றால் சரியல்ல.